### பின் தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்க

# மின்கட்டண சலுகை வழங்கப்படுமா?

## கருணாநிதி பதில்

சென்னை, ஜூலை. 23– "பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குபவர்களுக்கு மின் கட்டண சலுகை அளிக்கப்படுமா?" என்பதற்கு முதல்-அமைச்சர் கருணாநிதி பதில் அளித்தார்.

இது தொடர்பாக தமிழக சட்டசபையில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு முதல்-அமைச்சர் கருணாநிதி அளித்த பதில்களும் வருமாறு:-

**பின்தங்கிய பகுதி**

ஆர்.ஆர்.சேகரன் (த.மா.கா.):- சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டத்தை தொழில் துறையின் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்படுமா? ஓமலூரில் தொழில்பேட்டைகள் அமைக்கப்படுமா?

முதல்-அமைச்சர் கருணாநிதி:- ஓமலூர் வட்டத்தில் உள்ள காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டு உள்ளது. ஓமலூரில் சிப்காட் தொழில் பேட்டை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

**சலுகைகள்**

பரிதி இளம்வழுதி (துணை சபாநாயகர்):- பிற்பட்ட பகுதிகளில் தொழில் தொடங்குபவர்களுக்கு அறிவிக்கப்படும் சலுகைகள் என்ன?

முதல்-அமைச்சர் கருணாநிதி:- பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குபவர்களுக்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது. மேலும் 9 ஆண்டுகளுக்கு விற்பனை வரி தள்ளி வைக்கப்படுகிறது.

**தொழில்பேட்டைகள்**

பொன்னம்மாள் (த.மா.கா.):- நிலக்கோட்டை பகுதி பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டும் தொழிற்சாலைகள் அமைந்ததாக தெரியவில்லை. இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

கருணாநிதி:- 216 ஒன்றியங்கள் பின்தங்கிய பகுதிகளாகவும், 71 ஒன்றியங்கள் மிகவும் பின்தங்கிய பகுதியாகவும் அறிவிக்கப்பட்டு உள்ளது. இங்கு தொழில்பேட்டைகள் உருவாக்க அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

ஆர்.ஆர்.சேகரன் (த.மா.கா.):- ஓமலூர் பகுதியில் வேலை வாய்ப்பு இல்லாததால் நிறைய பேர் கொத்தடிமைகளாக வெளி மாநிலங்களுக்கு செல்கிறார்கள். இதை தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

கருணாநிதி:- ஓமலூரில் மட்டும் அல்லது அறிவிக்கப்பட்ட பல்வேறு பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சிக்கு என்னென்ன செய்யலாம் என்று அரசு யோசித்து வருகிறது.

பெ.சு. திருவேங்கடம் (தி.மு.க.):- கலசபாக்கம் தொகுதியை முற்போக்கு பகுதியாக அறிவித்ததை மறுபரிசீலனை செய்யப்படுமா?

கருணாநிதி:- அறிவிக்கப்பட்ட பின் தங்கிய தொகுதிகள் அனைத்திலும் தனியார் தொழில் தொடங்க முன்வரவில்லை. எனவேதான் சலுகைகள் மூலம் தனியார் தொழில் தொடங்க வருவார்களா என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

**முன்னுரிமை**

ஏ.எல்.சுப்பிரமணி (தி.மு.க.):- தொழில் தொடங்குபவர்களுக்கு மின் இணைப்பு தருவதில் முன்னுரிமை அளிக்கப்படுமா?

கருணாநிதி:- தொழில் தொடங்குபவர்கள் முதலில் "பொன் சாரம்" கொண்டு வந்தால் பின்னர் "மின்சாரம்" தரப்படும்.

தாமரைக்கனி (அஇஅ.முக.):- திருவில்லிப்புத்தூரில் ஒரு ஒன்றியத்தை பிற்பட்ட பகுதி என்பதை ரத்து செய்து விட்டார்கள். இது எதிர்க்கட்சியின் தொகுதி என்று பாராமல் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

கருணாநிதி:- திருவில்லிப்புத்தூர் ஒன்றியம் பிரிக்கப்படும் போது விடுபட்டு போய் இருக்கலாம். இது கவனத்தில் கொள்ளப்படும்.

**மின் கட்டண சலுகை**

ஞானசேகரன் (த.மா.கா.):- மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில் மின் கட்டணம் அதிகம். எனவே பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குவோருக்கு மின் கட்டண சலுகை அளிக்கப்படுமா?

கருணாநிதி:- விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியது இந்த அரசுதான். விவசாயிகளுக்காக வாதாட வேண்டிய ஞானசேகரன், தொழில் அதிபர்களுக்காக வாதாடுகிறார். அரசின் சலுகைகளை பயன்படுத்தி தனியார் தொழில் தொடங்கி வருவார்களே ஆனால் மின் கட்டண சலுகை பற்றி அப்போது பேசிக்கொள்ளலாம்.

இவ்வாறு கருணாநிதி பதில் அளித்தார்.